இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 184 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 01 – வியாழக்கிழமை 13 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 184 : Thiruvalluvar Year - 2056 - Maasi 01 - Thursday 13 February 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## இலங்கைக் கடற்படையினர் தொடர் தாக்குதல்!

# தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாத்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தலைத் தொடர்ந்து மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வேண்டுகோள்!

**புதுடெல்லி, பிப். 13 -**

**இலங்கைக் கடற்படையினர் தொடர் தாக்குதல் நடத்தி தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்து படகுகளையும் பறிமுதல் செய்து வருகின்றனர். இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசுக்கு பல முறை கடிதம் மூலமாக இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தலைத் தொடர்ந்து, மக்களவையில் நேற்று முன்தினம் மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இப்பிரச்சினை குறித்து உரையாற்றுகையில், "தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்" என்றும் "இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.**

தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்று கூறி இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.





அடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன் அவர்களின் படகு உள்ளிட்ட இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்பிலான உடைமைகளையும் பறிமுதல் செய்கின்றனர். இது தொடர் கதையாக நடைபெற்று வருகிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து கடிதம்!**

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் போதும், படகுகளை பறிமுதல் செய்யப்படும் போதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் அவர்களுக்கும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும், தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தியும் பலமுறை கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளார். ஒன்றிய அரசின் அலட்சியத்தால், தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டி விட்டனர் என்று கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

**மக்களவையில் - தி.மு.க. ஒத்தி வைப்பு தீர்மானம்!**

இந்நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் அவையை ஒத்தி வைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

**டி.ஆர்.பாலு கோரிக்கை!**

இந்நிலையில், மக்களவையில் தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினை குறித்து மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பேசியதாவது:-

இலங்கைக் கடற்படையினர் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு 520 கைது சம்பவங்களும், இந்த ஆண்டு கடந்த 40 நாட்களில் 77 கைது சம்பவங்களும் நடந்துள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

**இலங்கைக் கடற்படையினர் அத்துமீறல்!**

இலங்கைக் கடற்படையினர் இந்திய எல்லைக்குள் நுழைந்து அத்துமீறி வருகிறார்கள். நடுக் கடலில் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கிறார்கள். ஜனவரி 27 ஆம் தேதி 2 மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது

பிப்ரவரி 8ஆம் தேதி 14 மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். 97 மீனவர்கள் தற்போதும் இலங்கை சிறையில் உள்ளனர். 216 படகுகள் இலங்கை வசம் உள்ளது. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பலமுறை கடிதம் எழுதியுள்ளார். மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பேசினார்.

---

## ஆளுநர் ஆர்.என்.ரவியின் உண்மை முகத்தை வெளிக்கொண்டுவந்த

# உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கருத்தால் ஆளுநருக்கும் பா.ஜ.க.விற்கும் மிகப் பெரிய தலைகுனிவு!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, பிப். 13 -**

**ஆளுநர் ஆர்.என்.ரவியின் உண்மை முகத்தை வெளிக்கொண்டுவந்த உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கருத்தால் ஆளுநருக்கும் பா.ஜ.க.விற்கும் மிகப் பெரிய தலைகுனிவு ஏற்பட்டுள்ளது என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்த அவரது அறிக்கை வருமாறு :-

தமிழக அரசின் பல்வேறு மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்து உள்ளது. இந்த வழக்கு விசாரணை வரும் ஒவ்வொரு நாளும் நீதிபதிகள் ஆளுநர் தேவையில்லாமல் அரசியல் செய்கிறார் என்ற ரீதியில் தான் தங்கள் கருத்துக்களை தொடர்ந்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதிவு செய்து வருகிறார்கள்.

**ஆளுநர் பற்றி நீதிபதிகள் கருத்து!**

குறிப்பாக பிப்ரவரி 7ஆம் தேதி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சொன்ன கருத்துக்கள் ஆறறிவு உள்ள ஒரு மனிதர், ஆளுநர் ஆர்.என்.ரவி என்பது உண்மையாக இருந்தால் ஆளுநர் பதவியே தேவையில்லை என்று அவர் ராஜினாமா செய்துவிட்டு போயிருக்க வேண்டும். ஆளுநரின் பதவி காலமான ஐந்து ஆண்டு காலம் கடந்து அவருக்கு நீட்டிப்பும் தராமல் குடியரசுத் தலைவர் சொல்லும் வரை ஆளுநர் பதவியில் தொடரலாம் என்ற காத்திருப்பு பட்டியல் ஆளுநர் தான் இன்றைய தமிழக ஆளுநர். அவர் பதவி சென்ற ஆண்டு அக்டோபர் எட்டாம் தேதியுடன் காலாவதி ஆகிவிட்டது.

சரி உச்சநீதிமன்றம் ஆளுநர் பற்றி சொன்ன கருத்துக்களை நாம் பார்ப்போம். ஆளுநரிடம் கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே இருந்தார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள். பல்கலைக்கழக மசோதா, மத்திய சட்டத்திற்கு எதிராக இருந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன ?, மாநில அரசு எப்படித் தான் செயல்பட வேண்டுமென நினைக்கிறீர்கள்?, மாநில அரசின் செயல்பாடுகளுக்கு ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது இருக்கவும் முடியாது. அந்த முட்டுக்கட்டையை நீக்க வேண்டும். ஆளுநர் எதுவும் கூறாமல் மசோதாக்களை கிடப்பில் வைத்தால், அவர் மனதில் இருப்பது அரசுக்கு எப்படி தெரியும்? நான் ஒப்புதல் தராமல் மசோதாக்களை தடுத்து நிறுத்துகிறேன். மறுபரிசீலனை செய்யுமாறு உங்களைக் கேட்க மாட்டேன் என ஆளுநர் கூறினால் அதில் என்ன அர்த்தம் உள்ளது. இதன் மூலம் அரசியலமைப்பு சட்டத்தின் 200வது பிரிவின் இரண்டாம் பகுதியை ஆளுநர் நீர்த்து போக செய்திருக்கிறார். அவர் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டதாகவே தெரிகிறது.

ஆளுநர் இது தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்த்திருக்கலாம் அல்லது இந்த மசோதாக்களை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியிருக்கலாம். மசோதாக்களை கிடப்பில் போட்டு தீங்கிழைத்துள்ளீர்கள். இந்த விவகாரத்தில் தமிழக அரசின் மசோதாக்களில் ஆளுநர் கண்டறிந்த ஓட்டைகள் தான் என்ன? எதற்காக மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்தார் என்பதற்கான காரணத்தை காட்ட வேண்டும். குடியரசுத் தலைவருக்கு மசோதாக்களை பரிந்துரைக்கும் போது ஆளுநர் என்ன காரணம் கூறியுள்ளார்?, எந்த காரணத்தையும் கூறாமல் பரிந்துரை செய்திருந்தால் குடியரசுத் தலைவரே கேட்டுத் தெரிந்து கொள்வாரா?, உங்கள் வாதப்படி மசோதாக்களை நிறுத்தி வைப்பதாக இருந்தால் பல் கலைக்கழகங்களின் நிலைமை என்ன ஆவது? துணை வேந்தர் நியமிக்கப் படாவிட்டால் மாணவரின் எதிர்காலம் கல்வித்தரம் என்ன ஆகும்?, ஒரு மசோதா சரியானது அல்ல என கருதினால் ஒரேடியாக நிராகரிக்கலாமே தவிர அதை விடுத்து நிறுத்தி வைப்பது ஏன்?,



இப்படி ஆளுநர் தமிழக மக்களுக்கும் எதிராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களின் பெரும்பான்மை கருத்துக்கும் மதிப்பு தரவில்லை என்பதை உணர்ந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அவரின் உண்மை முகத்தை வெளிக்கொண்டு வந்து விட்டார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

**ஆளுநர் வேண்டாம் என்பதே தி.மு.க. கொள்கை!**

ஆளுநர் வேண்டாம் என்பதுதான் திமுகவின் நிரந்தர கொள்கை. இதை 1969ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அரசால் மத்திய மாநில உறவுகள் பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழு அதை உறுதிப்பட தெரிவித்திருக்கிறது. ஆளுநர்களை தனது கட்சியின் நலனுக்காக ஒன்றிய அரசாங்கம் பயன்படுத்துகிறது என்று ராஜமன்னார் குழு வெளிப்படையாகவே சுட்டிக் காட்டியது. இன்று வரை அதே நிலைமைதான் தொடர்கிறது.

ராஜமன்னார் குழு ஆளுநர் பதவி தேவையா என்று இந்தியாவில் உள்ள எல்லா மாநில முதல்வருக்கும் அரசியல் கட்சிகளுக்கும் சில கேள்விகளை அனுப்பி இருந்தது. மேற்குவங்க முதல்வர் ஜோதி பாசு தலைமையிலான அரசு ஆளுநர் பதவி தேவையற்ற ஒன்று. அது முற்றிலும் நீக்கப்படலாம் என்று கருத்து சொன்னது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தில் இருந்த திரிபுரா அரசாங்கமும் இதே கருத்தை தான் சொன்னது. தெலுங்கு தேச தலைவரும் முதல்வராகவும் இருந்த என்.டி.ராமராவ் தலைமையிலான ஆந்திர அரசு ஆளுநர் பதவி நீக்கப்பட வேண்டும் என்று தான் கருத்து சொல்லியது.

ஒன்றிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட செதல் வாட் தலைமையிலான ஆய்வுக் குழு ஆளுநர் ஐந்தாண்டுகளுக்கு மேல் நீடிக்கக் கூடாது என்று வலியுறுத்தியது. அதுமட்டுமல்ல அவர் பதவி காலம் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே புதிய ஆளுநர் யார் என்பது முடிவு செய்ய வேண்டும் என்றும் அந்த குழு கூறியது. அதேபோல் முதலமைச்சரை கலந்து ஆலோசித்து அதன் பின்பு தான் ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும் என்ற மரபு தொடர வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஆரம்ப காலங்களில் ஆளுநர் நியமிப்பதற்கு முன்பு ஆட்சியாளர்களை கலந்த ஆலோசிப்பது ஒன்றிய அரசின் வழக்கமாக இருந்தது. இப்போது அந்த நடைமுறை காணாமல் போய்விட்டது. சர்க்காரியா கமிஷனில் கர்நாடக முதல்வராக இருந்த ராமகிருஷ்ண ஹெக்டே சொன்ன ஆலோசனை ஆளுநர் நியமிப்பதற்கு முன்பு முதலமைச்சர் ஒப்புதல் பெற வேண்டும் இதற்கான சட்ட திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தார். அப்போதே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுநர் பதவியை நீக்கிவிட வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பரிந்துரை செய்தது.

**தனிப்பட்ட பிரச்சினை அல்ல!**

மாநில முதல்வர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் ஆளுநருக்கு திராவிட முன்னேற்ற கழகம் அரசுக்கும் உள்ள விவகாரம் இது ஏதோ ஒரு தனிப்பட்ட ஒரு அரசின் பிரச்சினை என்று நினைக்கக் கூடாது. திராவிட முன்னேற்ற கழகம் இந்த வழக்கில் எல்லா மாநிலம் முதல்வர்களுக்கும் சேர்ந்துதான் வாதிடுகிறது. குடியரசு தினம், சுதந்திர தினம் இரண்டு நாட்களிலும் ஆளுநர் தான் கொடியேற்றிக் கொண்டிருந்தார் சுதந்திர தினத்தில் முதல்வர் கொடியேற்ற வேண்டும் என்ற உரிமையை வாங்கித் தந்தது கூட தி.மு.க. முதல்வராக இருந்த கலைஞர் தான்.

நீதிமன்றம் கிட்டத்தட்ட சொன்ன கருத்துக்கள் எல்லாமே ஆளுநருக்கு ஆளுநரை இயக்கிக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா அரசுக்கும் மிகப்பெரிய தலை குனிவு. இதன் பிறகாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மதிக்க வேண்டும் என்ற மாண்பு இந்த மாண்புமிகுகளுக்கு வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.